கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **“தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்”** நாளை (13-08-2025 - புதன்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்” நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : “ஓரணியில் தமிழ்நாடு - உறுப்பினர் சேர்க்கை”**

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 8.8.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.




ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டக் கழகக் கூட்டத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

வாக்குரிமையை நசுக்குவதா?

# தேர்தல் ஆணையத்தின் நோக்கம் ஆபத்தானது!

## பொருளாதார மேதை அமர்த்தியா சென் பேட்டி!

புதுடெல்லி, ஆக. 12 -

**பொதுமக்களின் வாக்குரிமையை நசுக்குவது என்பது தேர்தல் ஆணையத்தின் நோக்கம் எனில் அது மிகவும் ஆபத்தானது என்று பொருளாதார நிபுணர் அமிர்தியா சென் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.**



அவரது பேட்டி வருமாறு:-

**கேள்வி** : நாடு முழுவதும் நடக்கும் தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

**பதில்** : இந்திய தேர்தல் ஆணையம் இதை முறையாகச் செய்தால் அதைப் பற்றி ஏன் கேள்வி எழப் போகிறது? அவசரம் அவசரமாக பிழைகளை நீக்க முயற்சி செய்தால் மேலும் பிழைகளே ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கும். மேலும் அதன் விளைவு மோசமாகவும் இருக்கும். தேர்தல் ஆணையத்தின் முயற்சியின் நோக்கம் விமர்சிக்கத் தக்கதாக மாறி உள்ளது. அதன் நடுநிலைமை குறித்து பலத்த கேள்விகள் எழுந்துள்ளன. பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்ளும் தேர்தல் ஆணையத்தின் தீவிர முயற்சிகளில் கூட கடுமையான பிழைகள் ஏற்படலாம் என்ற நிலையில் வர்க்கச் சார்பு உடைய தேர்தல் ஆணையத்தின் நோக்கம் ஆபத்து நிறைந்தது.

**கேள்வி** : தேர்தல் ஆணையத்தின் அவசரமான செயல்பாட்டினால் பெரும்பாலான மக்களின் வாக்குரிமை பறிக்கப்படும் அபாயம் உள்ளதா?

**பதில்** : தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் சந்தேகத்திற்கான காரணத்தை உருவாக்கக்கூடாது உச்சநீதிமன்றம் தன் மேற்பார்வை அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்தி தேர்தல் ஆணையத்தை கண்காணிக்க வேண்டும் என்பதும் மிகவும் முக்கியம். மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் இறுதிப் பொறுப்பு உச்சநீதிமன்றத்திற்கு உண்டு. அரசியல் அமைப்பின் உறுதிப்பாட்டையும் உத்தரவாதப்படுத்தும் வகையில் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் நாளை எதிர்காலம் குறித்த நம்பிக்கையும் நாம் அப்போது தான் தக்க வைக்க முடியும்.

**கேள்வி** : பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் ஏழை மற்றும் புலம்பெயர்ந்த மேற்கு வங்க மாநிலத்தின் தொழிலாளர்களுக்கு எதிராக நடத்தப்படும் அட்டூழியங்கள் பற்றி தங்கள் கருத்து என்ன?

**பதில்** : இந்தியா அனைத்து மாநிலங்களின் குடிமக்களுக்கும் சொந்தமான ஒரு நாடு. வங்காளி, மகாராஷ்டிரர், தமிழர்கள் யாராக இருந்தாலும் சரி நாட்டின் எந்தப் பகுதியிலும் அவர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டப்படக்கூடாது.

### பேரழிவை ஏற்படுத்தும் அதிகாரிகளின் அறியாமை

மேற்குவங்க தொழிலாளர்களை பாரபட்சமாக நடத்துவது மிக மோசமானது. வேறு எந்த மாநிலத்தின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களையும் பாகுபாடு நடத்துவதும் அப்படித்தான். இதில் கவலை என்னவென்றால் இந்தியர்களில் பல பிரிவினரை வங்க தேசத்திலிருந்து குடியேறியவர்கள் போல சித்தரிக்கும் போக்கு துரதிஷ்டவசமானது. கூடுதலாக இஸ்லாமிய எதிர்ப்பு உணர்வும் அதற்கு தூபம் போடும் பொழுது அவர்கள் மேலும் பாதிக்கப்படுகிறார்கள். பத்தாவது மற்றும் 11 ஆவது நூற்றாண்டில் பிறந்த வங்க மொழியை குறிப்பாக தில்லியில் உள்ள சில அதிகாரிகள், வங்க தேசத்தின் மொழியாக பார்க்கும் பொழுது அவர்களின் அறியாமையும் குழப்பமும் பேரழிவை ஏற்படுத்துகிறது.

**கேள்வி** : அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மாநில தேர்தலுக்கு தயாராகும் வகையில் மேற்கு வங்கத்தில் இந்துத்துவாவை ஊக்குவிக்க பா.ஜ.க. கடுமையாக உழைத்து வருவதாக தெரிகிறது, அவர்கள் வெற்றி பெறுவார்களா?

**பதில்** : இந்துமுஸ்லிம் நல்லுறவு என்பது மேற்கு வங்கத்தின் பெருமைமிகு பாரம்பரியங்களில் ஒன்று. மிக நீண்ட நெடிய வரலாறு படைத்தது. வகுப்புவாத அடிப்படையில் குறுகிய மனப்பான்மையை உருவாக்கி அந்த நல்லுறவை சீர்குலைக்க நினைக்கும் அரசியல் திட்டங்கள் நிறைவேறாது. குறுகிய பலனைப் பெறலாம். ஆனால் அந்த மாநிலத்தை வகுப்புவாத வெறுப்பின் கோட்டையாக மாற்றுவது அவ்வளவு எளிதல்ல. அம்மாநில சமூகக் கட்டமைப்பும் கலாச்சாரப் பிணைப்புகளும் ஆழமாக வேரூன்றியது. தூண்டிவிடப்படும் பிரிவினைவாதத்திற்கு எதிராக அந்த மாநிலத்தின் மக்கள் ஒன்றுபட்டு நிற்பார்கள்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

ரேசன் அட்டைதாரர்களுக்குக் கொடுப்பதற்காக

# செறிவூட்டப்பட்ட அரிசி, பருப்பு, பட்டாணி - ஒன்றிய அரசு கொள்முதல் செய்துள்ளதா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 12 -



பொது விநியோகத்திற்காக ரேசன் அட்டைதாரர்களுக்கு கொடுக்கும் செறிவூட்டப்பட்ட அரிசி, பருப்பு, பட்டாணி ஆகியவற்றை கூட்டுறவு சங்கங்கள் அல்லது கூட்டமைப்புகள் மூலம் ஒன்றிய அரசு கொள்முதல் செய்கிறதா? கடந்த ஐந்து ஆண்டுகளில், மாநில மற்றும் யூனியன் பிரதேச வாரியாக வாங்கப்பட்ட செறிவூட்டப்பட்ட அரிசியின் அளவு மற்றும் ஒரு கிலோ எடையின் விலை என்ன? கடந்த 5 ஆண்டுகளில் தேசிய கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளால் இதற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? என்ற கேள்விகளை கூட்டுறவு துறை அமைச்சரிடம் கழக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள துறை கூட்டுறவு அமைச்சர் அமித் ஷா, நுகர்வோர் விவகாரத் துறை வழங்கிய தகவலின்படி, பொது விநியோக திட்டத்திற்காக பருப்பு அல்லது பட்டாணியை கொள்முதல் செய்வதற்கான எந்த திட்டமும் ஒன்றிய அரசிடம் இல்லை என தெரிவித்துள்ளார்.

உணவு மற்றும் பொது விநியோகத் துறை வழங்கிய தகவலின்படி, மத்திய தொகுப்பிற்கான நெல் பெரும்பாலும் மாநில அரசின் கொள்முதல் நிறுவனங்களால் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதாகவும், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரிசி ஆலைகளுக்கு வழங்கவும், ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் B12 உடன் அரிசியை செறிவூட்டுவதற்கும், பொது விநியோக திட்டத்தின் கீழ் விநியோகிப்பதற்கும் இந்த திட்டத்தைத் தொடங்கியதாகவும், சமூகத்தில் ஆரோக்கியமான உணவு இல்லாமல் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரிடையே காணப்படும் நுண்ணூட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வதே இந்த திட்டத்தின் நோக்கமாகும் என்றும் அமைச்சர் அமித் ஷா பதிலளித்துள்ளார்.

இந்திய நாட்டில் உள்ள பல்வேறு வகையான ரேஷன் அட்டைதாரர்களுக்கான அரிசியை தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) மற்றும் இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு ஆகியவற்றின் மூலம் கொள்முதல் செய்வதால், செறிவூட்டப்பட்ட அரிசியை கொள்முதல் செய்வதில்லை என, தி.மு.க. எம்.பி. கிரிராஜனுக்கு, ஒன்றிய அரசின் அமைச்சர் அமித் ஷா பதில் அளித்துள்ளார்.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இருகையூர் ஊராட்சியில் VA சாலை முதல் சிங்கராயபுரம் வழியாக காரைக்காட்டான்குறிச்சி வழி வரை சாலை பலப்படுத்தும் பணியை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

‘முரசொலி’ ஏட்டின் 84ஆம் ஆண்டுப் பயணம்

# திராவிடர் கழகமும் ‘விடுதலை’யும் உச்சிமோந்து வாழ்த்துகின்றன!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக. 12 -

‘முரசொலி’ ஏட்டின் 84ஆம் ஆண்டுப் பயணம் குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-



மானமிகு சுயமரியாதைக் காரரான நமது முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளை - கையெழுத்து ஏடாக இருந்து இன்று திராவிட ஏவுகணையாக வளர்ந்துள்ள ‘முரசொலி’ நாளேடு, 84ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் எப்படி இரட்டைக் குழல் துப்பாக்கிகளோ அதே போன்று, 91ஆம் ஆண்டில் பயணம் செய்யும் “விடுதலை” நாளேடும், 84ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள “முரசொலி” நாளேடும் இரட்டைக் குழல்களே!

எதிர் நீச்சலிலும், அடக்குமுறை அம்புகளின் விழுப் புண்களாலும் வளர்ந்த திராவிடக் கொள்கை பரப்பும், பாதுகாக்கும் ஏடுகளான இவை இரண்டும் வெறும் காகிதங்கள் அல்ல; அறிவு ஆயுதங்கள், மூடநம்பிக்கைகளை வேரறுக்கும் விசித்திர வாள்கள்.

நெருக்கடி கால தணிக்கை நெருப்பாற்றையும் தண்டிய பயணங்கள்.

ஒருமுறை ‘முரசொலி’ நாளை முதல் வெளி வராது என்று கலைஞர் அறிவித்தவுடன் உடனே கோபாலபுரம் சென்று உரிமையுடன் வாதாடி மறு பரிசீலனைக்கு ஆளாக்கியதில் ‘விடுதலை’ ஆசிரியரான எனது பங்கும் சிறிது உண்டு என்பது இப்போது மகிழ்ச்சியூற்றாகிறது.

நல்ல கட்டமைப்புடன் தி.மு.க. தலைவர் மானமிகு மு.க. ஸ்டாலின் அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் வைகறையில் (சென்னையில்) நாம் படித்துப் பயன் பெறும் அரசியல், சமூக, திராவிட பண்பாட்டுப் பாதுகாப்பரண் அது!

வாழ்க வளர்க! வழிகாட்டும் விழிகளைப் பரப்புவோம்! பாதுகாப்போம்! வாழ்த்துகள்!!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டின் வாழ்வாதாரம் காக்க வைகோவின் பயணம்!

சென்னை, ஆக. 12 -

தமிழ்நாட்டின் எட்டு இடங்களில் நம் மாநில வாழ்வாதாரங்களைக் காக்க, ஜனநாயகத்தைப் பாதுகாக்க, மதச்சார்பின்மையை நிலைநிறுத்த மறுமலர்ச்சி திமுக பொதுச்செயலாளர் வைகோ அவர்களின் பரப்புரைக் கூட்டங்கள் 2025, ஆகஸ்ட் 9ஆம் நாள் தூத்துக்குடியில் தொடங்கியது. ஆகஸ்ட் 20 ஆம் நாள் சென்னையில் நிறைவடைகிறது.



இது குறித்து ம.தி.மு.க. தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2025 ஆகஸ்டு 11, இடம்: கம்பம், பொருள்: முல்லைப் பெரியாறும்; நியூட்ரினோவும்

2025 ஆகஸ்டு 12, இடம்: திண்டுக்கல், பொருள்: விவசாயிகள், மீனவர்கள் துயரம்

2025 ஆகஸ்டு 13, இடம்: கும்பகோணம், பொருள்: மேகதாதுவும், மீத்தேனும்

2025 ஆகஸ்டு 14, இடம்: நெய்வேலி, பொருள்: நெய்வேலி நிலக்கரி நிறுவனம்

2025 ஆகஸ்டு 18, இடம்: கோவை சூலூர், பொருள்: இந்தி ஏகாதிபத்தியம்

2025 ஆகஸ்டு 20, இடம்: திருவான்மியூர், பொருள்: சமூக நீதியும்; திராவிட இயக்கமும்

அனைத்துக் கூட்டங்களிலும் ம.தி.மு.க. பொருளாளர் மு.செந்திலதிபன், கவிஞர் மணிவேந்தன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்த

# ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா?

## மக்களவையில் — டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.12-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 8 ஆகஸ்ட் 2025 அன்று மக்களவையில்,கடந்த ஐந்தாண்டுகளில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டடபப்பட்டுள்ளன? என்றும், அனுமதிக்கப்பட்ட மருத்துப் பணியிடங்களில் எவ்வளவு பணியிடங்கள் காலியாக உள்ளது? என்றும், நிலைமையைப் சரி செய்யவும், கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்தவும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க சுகாதாரத் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:-

கடந்த மார்ச் 2023 நிலவரப்படி 25354 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிராமப்புறங்களிலும் 6528 நிலையங்கள் நகர்ப்புறங்களிலும் செயல்பட்டு வருகின்றன என்றும், பொது சுகாதாரத்திற்கு அந்தந்த மாநில அரசுகளே பொறுப்பு என்றும், கடந்த 202526 ஆண்டில் தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் கட்டமைப்புகளை மேம்படுத்த ரூபாய் நான்கு கோடியே 24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆயூஸ்மான் பாரத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் ரூபாய் 18799 கோடிகளில் 621 உயிர் காக்கும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும்,15வது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, கிராமப்புற சுகாதாரத் திற்கு ரூபாய் 70,051 கோடிகள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கிராமப்புறத்தில் பணிபுரியும் மருத்துவர்களுக்கான சிறப்பு நிதியுதவி, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு மருத்துவர்களுக்கு சிறப்பு சலுகைகள், தாய்மார்களுக்குகென பணிபுரியும் செவிலியர்களுக்கான சிறப்பு ஊதியம், மருத்து மேற்படிப்பு படிக்க, கிராமப்புற மருத்துவர்களுக்கான முன்னுரிமை, மருத்துவர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் என தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் கிராமப் புற சுகாதாரத்தை மேம்படுத்த தேவையான அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்று ஒன்றிய அரசின் சுகாதாரத்துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ், பதில் அளித்துள்ளார்.

# தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் ‘மாணவர் மனசு’ பெட்டி திட்டம்!

## கேரள அரசுப் பள்ளிகளிலும் தொடக்கம்!

சென்னை, ஆக.12-

தமிழ்நாடு அரசு பள்ளிகளில் சிறப்பு திட்டமாக மாணவர் மனசு பெட்டி திட்டத்தை அறிவித்து அதனை வெகு சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவர் மனசு பெட்டி வைக்கப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சிக்கு வந்தது முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து “ஆசிரியர் மனசு” திட்டமும் செயல்படுத்தப்பட்டு, ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்காக மின்னஞ்சலும் அறிவிக்கப்பட்டது. மாணவர்கள் தங்களின் விருப்பம், ஆலோசனை, கோரிக்கை ஆகியனவற்றை கடிதமாக எழுதி மாணவர் மனசு பெட்டியில் செலுத்தும் கடிதத்தை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளிகளுக்கு நேரில் ஆய்வுக்கு செல்லும் போது முதல் நிகழ்வாக மாணவர் மனசு பெட்டியில் உள்ள கடிதத்தை படித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் உத்தரவிட்டு துரித நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மேலும் தலைமை ஆசிரியர்கள் மாணவர் மனசு பெட்டி கடிதங்கள் மீதும் உரிய தீர்வு கண்டு வருகிறார்கள் இந்த திட்டம் மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் மாணவர் மனசு பெட்டி திட்டத்தை தற்போது கேரளா அரசும் “சுரக்சா மித்ரம்” என்ற திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தி வருகிறது.